8. அறிக்கை அளித்தல்

அ. ஆய்வுக்குழுவின் அறிக்கை.

1. விவசாய வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1978-ன் மீதான ஆய்வுக் குழுவின் அறிக்கை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, ''தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு விவசாய வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 23/1978) மீதான ஆய்வுக் குழுவின் அறிக்கையை அளிக்கிறேன்.

ஆ. பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, ''1972-73 ஆம் ஆண்டிற்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) அறிக்கையின் 24 ஆம் பத்தி மீதான பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கையை (ஒன்பதாவது அறிக்கை) தலைவரின் சார்பாக அளிக்கிறேன்.

9. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

அ. பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவை செயலர் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவை செயலர்): இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.